சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**<u>ஆணை நாள் 02.04.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**<u>வழக்கு எண். NC 236/E/2025 (SA 8636/E/2023)</u>**

திரு.ஆ.ராமையா -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ வக்பு
ஆய்வாளர், எண்.51/80, K.A.P.வணிக வளாகம்,
குலவணிகர்புரம், பாளையங்கோட்டை, பொது அதிகார அமைப்பு
திருநெல்வேலி - 627 002

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 24.07.2025 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் திரு.மு.மன்சூர்அலிகான், வக்ப் ஆய்வாளர், தூத்துக்குடி அவர்கள் இவ்வாணையத்தில் 29.01.2026-ல் நேரில் ஆஜராகி, தங்கள் அலுவலக மனு எண்.786/வ.ஆ/து.குடி/த.அ.உ.ச/2026, நாள் 12.01.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரர் சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் 19.01.2026 அன்று பார்வையிட அழைக்கப்பட்டதாகவும், அதன்படி மனுதாரர் மகன் (திரு.பால்குமார்) 19.01.2026 அன்று நேரில் அலுவலகத்திற்கு வந்து கோப்புகளை பார்வையிட்டதாகவும், அவர் எந்த தகவலும், குறிப்பிட்டுக் கோராததால் தகவல் வழங்க வழிவகையில்லை என அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 12.01.2026 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக மனுதாரர் 19.01.2026 தேதியிட்டு சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் தகவல் தொடர்பான ஆவணங்களை பார்வையிட அழைக்கப்பட்டு, மனுதாரர் (சார்பு அவரது மகன் திரு.பால்குமார்) ஆவணங்களை பார்வையிட்டு, <u>19.01.2025 அன்று நேரில் பார்வையிட்டேன் என திரு.பால்குமார் கையொப்பம் செய்துள்ளார் என்பது இன்றைய ஆவண பரிசீலனையில்</u>

தெரிய வருகிறது. ஆனால் மனுதாரர் தகவல் ஏதும் குறிப்பிட்டுக் கோரவில்லை என இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

3. **எனவே, இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டு குறிப்பிட் தகவல் கோரும் வகையில், மனுதாரர் (சார்பு அவரது மகன்) 19.01.2025 அன்று பொது அதிகார அமைப்பில் ஆஜராகி ஆவணங்களை பார்வையிட்டுள்ளார். ஆனால் ஆவணங்களை பார்வையிட்டு குறிப்பிட்டு தகவல் கோர உரிய சந்தர்ப்பம் மனுதாரருக்கு வழங்கப்பட்டும், மனுதாரர் அதனை பயன்படுத்த தவறியுள்ளார் என ஆணையத்தால் கருதப்படுகிறது**.

4. எனவே, ஆணையத்தின் 26.11.2025 தேதியிட்ட உத்தரவு பொதுத் தகவல் அலுவலரால் நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் NC 236/E/2025 (SA 8636/E/2023)</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/ வக்பு ஆய்வாளர்,
எண்.51/80, K.A.P.வணிக வளாகம்,
குலவணிகர்புரம், பாளையங்கோட்டை,
திருநெல்வேலி - 627 002.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.ஆ.ராமையா (லேட்), ரா.பால்குமார்,
3A, ஈஸ்வரி அம்மன் கோவில் தெரு,
கீழ முன்னீர்பள்ளம்,
பாளையங்கோட்டை வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம் - 627 356.

Copy to: File MP/PA,